பக்கங்கள் 18+4

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆவணி 02 ஞாயிற்றுக்கிழமை 18.08.2024 | அதிர்வு 17

## நாமலுக்கு ஆதரவு திரட்டி 120 பிரதான கூட்டங்கள்!



ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷவுக்கு ஆதரவு 04

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# பிரதான வேட்பாளர்களுடன் தமிழரசு தொடர்ந்து பேசும்!

### இன்று மத்திய குழுவில் முடிவு





வவுனியா, ஓகஸ்ட் 18

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்களுடன் தொடர்ந்து பேச்சுக்களை முன்னெடுப்பது என இன்று வவுனியாவில் கூடிய இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது என்று கட்சியின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. தெரிவித்தார். 04

## அறிவுறுத்தல்!

### உறுப்பினர்களுக்கு தமிழரசு வழங்கியது

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான விடயங்களில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பிரமுகர்களும் அங்கத்தவர்களும் மிகவும் நிதானத்துடனும் கவனத்துடனும் செயற்பட வேண்டும் என்று இன்று வவுனியாவில் கூடிய இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழு அறிவுறுத்தல் வழங்கியிருக்கின்றது.

கட்சியின் அனுமதியின்றி ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சையாகப் போட்டியிட வேட்புமனுத் தாக்கல் செய்துள்ள 04

# அதிக வாக்குகளைப் பெற்று சாதனை படைப்பார் ரணில்!

### தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் ராஜித சூளுரை





"வரும் செப்டெம்பர் மாதம் 21ஆம் திகதி இரவு ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளின்படி ரணில் விக்கிரமசிங்க இலங்கை வரலாற்றில் அதிக வாக்குகளைப் பெற்று வெற்றி பெறுவார்."

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பக்கம் வந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அநுராதபுரம், சல்காது மைதானத்தில் நேற்று நடைபெற்ற முதலாவது "இயலும் ஸ்ரீலங்கா" தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். 04

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally



# கட்சி, நிற, இன பேதமின்றி ரணிலுக்கு ஆதரவளிக்க அணிதிரண்டுள்ளோம்!

## பிரசாரக் கூட்டத்தில் அமைச்சர் பவித்ரா தெரிவிப்பு






இந்த முறை ஜனாதிபதித் தேர்தலில் கட்சி, நிற, இன பேதமின்றி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க அணிதிரண்டுள்ளோம் என்று அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

அநுராதபுரம், சல்காது மைதானத்தில் நேற்று நடைபெற்ற முதலாவது "இயலும் ஸ்ரீலங்கா" தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், "ஜனாதிபதித் தேர்தல் வரலாற்றில் முதல் தடவையாக சுயேச்சை வேட்பாளர் ஒருவருக்கு இவ்வளவு ஆதரவு கிடைத்துள்ளது. இதற்கு முன்னர் சுயேச்சை வேட்பாளருக்கு ஆதரவு வழங்கியதில்லை. ஆனால், இம்முறை கட்சி, நிற, இன பேதமின்றி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க அணிதிரண்டுள்ளோம். மக்கள் குறித்தும், நாடு குறித்தும் சிந்திக்கும் அனைவரும் ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்தத் தீர்மானித்துவிட்டனர்.

நாடு மிகவும் பாதாளத்தில் வீழ்ந்தது. பல மைல் தூரம் காஸ் வரிசை இருந்தது. பல மைல் தூரம் எரிபொருள் வரிசை இருந்தது. மின்சாரம் தடைப்பட்டிருந்தது. பஞ்சம் வரும் என்றும் மக்கள் அஞ்சினார்கள். இருந்த ஜனாதிபதி தப்பியோடினார். எதிர்க்கட்சித் தலைவர் ஒளிந்துகொண்டார். நாடு நிர்க்கதிக்குள்ளானது.

"அரகலய" போராட்டத்துக்குச் சென்றபோது எதிர்க்கட்சித் தலைவர் சஜித்தை விரட்டி விரட்டி அடித்ததைப் போல மீண்டும் விரட்டியடித்து விடுவர் என்ற அச்சத்திலேயே அவர் நாட்டைப் பொறுப்பேற்க முன்வரவில்லை." – என்றார்.

# இலங்கைக்கு இனி நல்ல காலம் பிறக்கும் என்று நம்புகின்றோம்

## ரணிலை ஆதரிக்கும் பிரசாரக் கூட்டத்தில் டக்ளஸ் உரை

இலங்கைக்கு இனி நல்ல காலம் பிறக்கும் என்று நம்புகின்றோம் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து அநுராதபுரம், சல்காது மைதானத்தில் நேற்று நடைபெற்ற முதலாவது "இயலும் ஸ்ரீலங்கா" தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.




அவர் மேலும் உரையாற்றுகையில், "கடந்த காலத்தில் எதிர்கொண்ட பிரச்சினைகளிலிருந்து பொருளாதார வீழ்ச்சியிலிருந்து எழுச்சியை நோக்கிக் கொண்டு வந்தவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. அவ்வாறான ஒரே தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மட்டுமே. அதனால் அவருடன் சேர்ந்து பயணிக்க வேண்டியது அவசியம். நாட்டுக்கு இனி நல்ல காலம் பிறக்கும் என்று நம்புகின்றோம்." – என்றார்.



# தந்தை செல்வாவை வணங்கி பரப்புரையை ஆரம்பித்த அரியம்

(எஸ்.நிதர்ஷன்)

தமிழ்ப் பொது வேட்பாளர் பாக்கியசெல்வம் அரியநேத்திரன், யாழ்ப்பாணத்திலுள்ள தந்தை செல்வா நினைவுத் தூபியில் இன்று அஞ்சலி செலுத்தினார்.

காலை 9 மணியளவில் தந்தை செல்வாவின் உருவச் சிலைக்கு அரியநேத்திரனால் மலர் மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்போது தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன், சிவில் சமூகப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதேவேளை, முல்லைத்தீவு, வற்றாப்பளை செந்தமிழ் விளையாட்டு மைதானத்தில் இன்று மாலை தமிழ்ப் பொது வேட்பாளர் அறிமுகப் பொதுக் கூட்டம் நடைபெறுகின்றது.

அதனைத் தொடர்ந்து வடக்கு, கிழக்கில் எட்டு மாவட்டங்களிலும் உள்ள ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளிலும் இரண்டு கூட்டங்களும், மாவட்டங்களுக்கு ஒரு பெரும் பொதுக்கூட்டமும் தமிழ்ப் பொது வேட்பாளர் கலந்து கொள்ளும் கூட்டமாக இடம்பெறத் திட்டமிடப்பட்டுள்ளது.









# வாகன விபத்தில் எழுவர் காயம்!

கொழும்பு – கண்டி பிரதான வீதியில் இன்று இடம்பெற்ற வாகன விபத்தில் ஏழு பேர் காயமடைந்துள்ளனர்.

அவர்கள் சிகிச்சைக்காக கேகாலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கேகாலை, மொலகொட பிரதேசத்தில் இரண்டு கார்கள் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

அந்தந்த வாகனங்களில் இருந்த எட்டு மாதங்கள் மற்றும் ஒன்றரை வயதுடைய இரண்டு குழந்தைகளும் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மேலும் மூன்று பெண்கள் மற்றும் இரண்டு ஆண்கள் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

கண்டியில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த காரின் சாரதி தூங்கியமையே விபத்துக்குக் காரணம் என்று முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

காயமடைந்தவர்களின் நிலைமை கவலைக்கிடமாக இல்லை என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### அதிக வாக்குகளை...

அவர் மேலும் உரையாற்றுகையில்,

“2022ஆம் ஆண்டில் நாடு வீழ்ந்தது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஓடிவிட்டார். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஓடிவிட்டார். நிதி அமைச்சர் தப்பியோடினார். யாரும் இதனைப் பொறுப்பேற்க முன்வரவில்லை. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அவர் நிதி அமைச்சின் செயலாளர், மத்திய வங்கி ஆளுநர் ஆகியோரை அழைத்துப் பேச்சு நடத்தினார்.

அதன்போது இதில் தலையிட வேண்டாம் என்று சஜித் பிரேமதாஸவுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. இதனை ஒரு அதிசக்தி வாய்ந்த நபரினால் மட்டுமே மீட்டெடுக்க முடியும் என்று ஹர்ஷ டி சில்வா கூறினார். ரணில் விக்கிரமசிங்க இதனை மீட்டெடுத்தார். முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அநுரகுமார திஸாநாயக்கவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. பொறுப்பேற்க முடியாது என்று அவர்கள் இருவரும் கூறிவிட்டனர்.

எரிபொருள், காஸ் உள்ளிட்ட அனைத்து வரிசைகளிலும் நீங்கள் காத்திருந்த அனுபவம் உங்களுக்கு இருக்கும். இதனைச் சரி செய்ய யாரும் முன்வரவில்லை. ஆனால், நாடாளுமன்றத்தில் தனி மனிதராக ஒருவர் இருந்தார். அதுதான் ரணில் விக்கிரமசிங்க. அந்த நபர் பதவியை ஏற்று வெளியே வரும்போது ஊடகங்கள் கேள்விகளை எழுப்பின.

மிகவும் சிரமமான பணி, ஆனால் இதனை நான் செய்து முடிப்பேன் என்று ரணில் விக்கிரமசிங்க கூறினார். அவ்வாறே செய்து காட்டினார். அவர் இன்று ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்றார். அன்று பொருட்களின் விலை விண்ணைத் தொட்டது. அது தற்போது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. திறைசேரி காலியாகியிருந்தது. ரணில் விக்கிரமசிங்கவிடம் வெற்றுப் பாத்திரமே கையளிக்கப்பட்டது. தற்போது பொருளாதாரம் வளர ஆரம்பித்துள்ளது.

கிரேக்கத்தின் பொருளாதாரம் வீழ்ந்தபோது அங்கு என்ன நடந்தது? அரச ஊழியர்களின் சம்பளம் 20 வீதம் வரை குறைக்கப்பட்டது. ஆனால், இலங்கையில் அரச ஊழியர்களின் சம்பளம் வெட்டப்படவில்லை. இது ஆச்சரியமான விடயம். ஆஸ்திரேலிய பிரதமர் ஸ்கொட் மொரிசன் வந்தார். வங்குரோத்து அடைந்த நாடொன்றுக்கு வந்திருக்கின்றேன் என்பதை என்னால் நினைத்துப் பார்க்க முடியவில்லை என்று தெரிவித்தார். மக்கள் வாழ்க்கை வழமைக்குத் திரும்பியிருந்தது. மக்கள் பொழுதுபோக்கில் ஈடுபட்டனர். இதனைத் தன்னால் நம்ப முடியவில்லை என்று ஸ்கொட் மொரிசன் கூறினார்.

உலகம் ரணில் விக்கிரமசிங்கவைப் பாராட்டுகின்றது. உள்நாட்டில் சிலர் திட்டித் தீர்க்கின்றனர். உண்மையைப் புரிந்துகொள்ளுங்கள். மீண்டும் விளையாட வேண்டாம். ஏற்கனவே விளையாடி பட்டபாடு உங்களுக்குத் தெரியும். இரவில் வீழ்ந்த குழியில் பகலில் விழ வேண்டாம். ரணில் விக்கிரமசிங்கவைத் தவிர வேறு யார் வந்தாலும் நாடு மீண்டும் ஆபத்தில் விழும். எமது நிபந்தனைகளை உடைத்தால் மீண்டும் விழ நேரிடும் என்று சர்வதேச நாணய நிதியம் கூறியிருக்கின்றது. கிரேக்கத்தில் இதுவே நடந்தது. எனவே, உங்களின் பிள்ளைகளின் எதிர்காலத்துடன் விளையாட வேண்டாம்.

ரணில் விக்கிரமசிங்கவிடம் நாட்டை ஒப்படையுங்கள். 2025ஆம் ஆண்டு இந்த நிலைமையை மேலும் மேம்படுத்த வேண்டும். ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து இதுவரை 14 பேர் வந்துள்ளனர். இன்னும் முடியவில்லை. இன்னும் வருகின்றார்கள். செப்டெம்பர் 21ஆம் திகதி இரவு தேர்தல் முடிவுகளின்படி ரணில் விக்கிரமசிங்க இலங்கை வரலாற்றில் அதிக வாக்குகளைப் பெற்று வெற்றி பெறுவார்.” – என்றார்.

### நாமலுக்கு ஆதரவு...

திரட்டும் வகையில் பிரதான 120 கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்று இலங்கைக்கான ரஷ்யாவின் முன்னாள் தூதுவரும் ராஜபக்ஷ குடும்ப உறுப்பினருமான உதயங்க வீரதுங்க தெரிவித்தார்.

இதில் 40 கூட்டங்களில் மஹிந்த ராஜபக்ஷ கலந்துகொள்வார் எனவும், முதலாவது பிரசாரக் கூட்டம் எதிர்வரும் 21ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது எனவும் அவர் கூறினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

“ஜனாதிபதித் தேர்தல் களத்தில் தற்போதைய சூழ்நிலையில் சஜித் பிரேமதாஸவே முன்னிலையில் உள்ளார். நாமல் ராஜபக்ஷவுக்கு சஜித்துடன்தான் போட்டி உள்ளது. தேர்தல் பிரசாரம் ஆரம்பமான பின்னர் சஜித்தையும் அவர் முந்துவார்.

நாமல் ராஜபக்ச களமிறங்கியுள்ளதால் ரணில் விக்கிரமசிங்க அச்சத்தில் உள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவர் பக்கம் சென்றிருந்தாலும், மக்கள் மொட்டுக் கட்சியுடன்தான் உள்ளனர்.” – என்றார்.

### பிரதான வேட்பாளர்களுடன்...

கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தலைமையில் இந்தக் கூட்டம் இன்று நடைபெற்றது.

தென்னிலங்கையின் பிரதான கட்சிகளோடு நடைபெறும் பேச்சுக்களின் விவரங்களைச் சுமந்திரன் எம்.பி. இன்றைய கூட்டத்தில் தெளிவுபடுத்தினார்.

தொடர்ந்து பேச்சுக்களை முன்னெடுக்கும்படியும், சம்பந்தப்பட்ட வேட்பாளர்களின் கருத்து நிலைகளை அறிந்து, அவர்களின் தேர்தல் அறிக்கைகள் வெளியான பின்னர் மத்திய குழு மீண்டும் கூடி அவற்றை ஆராய்ந்து, ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான ஒரு முடிவை எடுக்க வேண்டும் என்றும் இன்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

தொடர்ந்து பிரதான வேட்பாளர்களுடன் பேச்சு நடத்துவது தொடர்பிலும், தேர்தல் விஞ்ஞாபனங்கள் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்ட பின்னர் அவற்றையும் பரிசீலித்து ஒரு தீர்மானத்தை எடுப்பது குறித்தும் இன்றைய மத்திய குழுவில் யோசனை ஒன்றை சிறீதரன் எம்.பி. பிரேரிக்க அதனை மத்திய குழு ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

இன்றைய கூட்டத்தின் ஆரம்பத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டு சற்று நேரத்தில் சிறீதரன் எம்.பி. கூட்டத்திலிருந்து புறப்பட்டுச் சென்றார். இன்றைய கூட்டத்தில் அவர் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவான கருத்து எதனையும் முன்வைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### அறிவுறுத்தல்...

தமிழ்ப் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரன் மீது கட்சியினால் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதையும் –

தென்னிலங்கை பிரதான வேட்பாளர்களோடு தொடர்ந்து பேசுவதற்குக் கட்சி தீர்மானித்திருப்பதையும் –

பிரதான கட்சிகளின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் வெளியான பின்னர் அவை யாவற்றையும் பரிசீலித்து ஒரு முடிவை எடுக்கும் தீர்மானத்தில் கட்சி இருப்பதையும் கவனத்தில் கொண்டு, பொறுப்புடனும் நிதானத்துடனும் செயற்படுமாறு கட்சியின் பிரமுகர்களுக்கும் உறுப்பினர்களுக்கும் மத்திய குழு அறிவுறுத்தல் வழங்கும் தீர்மானத்தை இன்று எடுத்திருக்கின்றது.

– இந்தத் தகவலை இன்று மத்திய குழுக் கூட்டத்தின் பின்னர் சுமந்திரன் எம்.பி. ஊடகவியலாளர்களுக்குத் தெரிவித்தார்.





# சஜித் பிரேமதாஸாவை ஆதரிப்பதாக தெரிவித்துள்ள ஜனநாயக முன்னணி

(எம். எப். றிபாஸ்)

இலங்கை ஜனநாயக முன்னணி கட்சியினர் சஜித் பிரேமதாஸாவை ஆதரிப்பதாக தெரிவித்துள்ளனர்.

கட்சியின் தலைவர் ஏ.பீ. கமால்தீன் தலைமையில் செயலாளர் எஸ்.ஜெயராஜ், சிரேஷ்ட பிரதி தலைவர் எம்.ஐ. எஸ்.ஹமீட் ஆகியோர் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை சந்தித்து தங்களது கோரிக்கை அடங்கிய மகஜரைக் கையளித்தனர்.

சஜித் பிரேமதாஸவின் வெற்றிக்கு நாடு தழுவியரீதியில் தமது கட்சியும், கட்சி உறுப்பினர்களும் தேர்தல் பிரச்சாரங்களில் ஈடுபடவுள்ளனர் என்று தலைவர் கமால்தீன் மேலும் தெரிவித்துள்ளார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## முறைமை மாற்றம் அவசியம்

இந்த ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராகக் களம் இறங்கி இருக்கும் முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா எம்.பி. இலங்கை அரசியல்வாதிகள் குறித்துத் தமது கணிப்பீடு ஒன்றை முன்வைக்கின்றார். அது கவனிக்கப்பட வேண்டியதாக இருக்கின்றது

✦ இந்த நாட்டில் ஐம்பது வீத அரசியல்வாதிகள் ஊழல் பேர்வழிகள்.

✦ எஞ்சிய ஐம்பது வீதத்தில் சுமார் 35 வீதத்தினர் ஊழல்வாதிகள் அல்லர். ஆயினும் அவர்கள் தீர்க்கதரிசனமான பார்வையோ பயனுள்ள இலக்கோ கொண்டவர்கள் அல்லர். அவர்களுக்குப் படைப்பாற்றலும் இல்லை. பொருளாதார மற்றும் சமூக இயக்க முறைமை குறித்த சிந்தனை அறிவும் கிடையாது. அவர்கள் சமூகத்தில் உயர் அடுக்கில் உள்ளவர்களாகத் தங்களைக் காட்டிக் கொள்ளும் விருப்பத்தில் - முக்கிய பிரமுகர்களாக தங்களை முன்னிறுத்துவதற்காக - அரசியலுக்குள் நுழைந்துள்ளனர்.

✦ எஞ்சிய பதினைந்து வீதத்தினர் மட்டுமே நாடு மீது மதிப்பு கொண்ட- செயலாற்றல் மிக்க - பரந்த அறிவுடைய - பக்குவப்பட்ட - தகுதியினர். ஆனால் அத்தகையோர் எந்தக் கட்சியிலும் சக்தி வாய்ந்த - முக்கியத்துவம் மிக்க - பதவி நிலைகளில் இல்லை.

- சரத் பொன்சேகா கூறுகின்ற இந்த வீதக் கணக்கு சரியானதோ தெரியவில்லை. ஆனால் அரசியலில் இத்தகைய ஊழல்வாதிகள் மிகுந்து கிடக்கின்றமை கண்கூடு. அதனால்தான் இந்த நாட்டுக்கு இந்த இழிநிலைமை என்பதும் உண்மை.

அவர் கூறுகின்றமைப் போல திறமை உள்ளவர்கள்- நேர்மையானவர்கள் - ஊழலற்றவர்கள் - எந்தக் கட்சியிலும் முன்னிலையிலோ அதிகாரமிக்க பதவிகளிலோ இல்லை. நமது அரசியல் முறைமை சீரழிந்து போகின்றமைக்கு இதுவும் ஒரு பிரதான காரணம்.

இலங்கையில் தற்போதைய அரசியல் முறைமையின் கீழ் - கட்சிகளின் பட்டியல்களில்இருந்துபதவிக்குரியவர்களைத் தேர்ந்தெடுக்கும் முறைமையின் கீழ் - திறமையும் தகுதியும் நேர்மையும் உடையவர்கள் மேலெழுந்து வர முடியாது என்பதுதான் யதார்த்தம்.

அத்தகையோரை தேடித் தேர்வு செய்வதில் தங்களின் அறிவை உபயோகித்துக் கொள்ள வேண்டும் என்ற பிரக்ஞையும் நாட்டு மக்களுக்கு கிடையாது.

வெறும் பணத்துக்கும், பகட்டுக்கும், சாத்தியமற்ற வறட்டுக் கோஷங்களுக்கும், வாய்வீச்சுகளுக்கும் எடுபடும் சாதாரண மக்களைக் கருவியாகப் பயன்படுத்தி ஏமாற்றுக்காரர்களும், ஊழல்வாதிகளும், வாய்ச்சவடால் பேர்வழிகளுமே இன்று உள்ளூர் மற்றும் தேசியத் தலைவர்களாக - மக்கள் பிரதிநிதிகளாக - வலம் வந்து கொண்டிருக்கின்றனர்.

இந்த முறைமையை முழுமையாக மாற்றும் இலக்குடன்தான் அறகலயப் போராட்டம் அத்தகைய எழுச்சியுடன் வெடித்தது. ஆட்சி முறைமையையே மாற்றும் அந்த எழுச்சி அரசு தலைவரின் மாற்றத்துடன் அடங்கிப் போனமை அல்லது அடக்கப்பட்டமை ஒரு துரதிஷ்டம்தான்.

அந்தர் பல்டிகளும், குத்துக்கரணங்களும் அடித்தவாறு ஊழல்வாதிகளும் புரட்டுக்காரர்களும் மோசடிப் பேர்வழிகளுமே கட்சிகளிலும், பிரதிநிதித்துவப் பதவிகளிலும், அரசியல் அதிகார நிர்வாகங்களிலும் கோலோச்சும் பேரவல நிலைதான் நாட்டில் தொடர்கின்றது.

அரசியல் முறைமையில் மாற்றம் ஏற்பட்டால் மட்டுமே இந்த இழி நிலையில் இருந்து நாடும் மக்களும் மீண்டெழ முடியும். அரசியல் அதிகாரத்தை தற்போது மாறி மாறி தக்கவைத்திருக்கும் இப்போதைய அரசியல்வாதிகள் அதற்கு இடமளிக்க மாட்டார்கள் என்பதும் வாஸ்தவம்தான்.



# மாணவர்களின் கற்றல் நடவடிக்கைக்கு உதவிகள்

(பி.கேதீஸ்)

சங்கராஜி நினைவு அறக்கட்டளையின் ஊடாக திருகோணமலை கூனித்தீவு நாவலர் வித்தியாலயம், சம்பூர் மத்திய மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைண மாண வர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்கும் நிதிவுதவி வழங்கப்பட்டது.

இதன்போது சங்கராஜி நினைவு அறக்கட்டளையின் தலைவர் நேசன் சங்கராஜி, அதன் செயலாளர் ஏ.கம லாநந்தன், அதன் மத்திய மாகாண இணைப்பாளர் ராஜ்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.








# சாதித்தது

## வவு. சைவப்பிரகாச மகளிர் கல்லூரி






வடக்கு மாகாண ரீதியில் நடைபெற்ற வலைப்பந்தாட்ட போட்டியில் 20 வயதுக்குட்பட்டவர்களுக்கான பிரிவில் வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி முதலாம் இடத்தையும், உடுவில் மகளிர் கல்லூரி இரண்டாம் இடத்தையும், மானிப்பாய் மகளிர் கல்லூரி மூன்றாம் இடத்தையும் பெற்றன.

அத்துடன் 18 வயதுப் பிரிவின் கீழ் நடைபெற்ற போட்டியில் வவுனியா சைவபிரகாச மகளிர் கல்லூரி முதலாமிடத்தையும், பரந்தன் இந்து மகா வித்தியாலயம் இரண்டாமிடத்தையும், அராலி சரஸ்வதி இந்துக்கல்லூரி மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டன.

உடுவில் மகளிர் கல்லூரியின் 200ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு குறித்த போட்டிககளின் அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டிகள் உடுவில் மகளிர் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றன.

பாடசாலை அதிபர் செல்வி ரொசானா மதுரமதி குலேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த விளையாட்டு நிகழ்வில் விருந்தினர்களாக வலிகாமம் வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் செந்தில் குமரன், உடுவில் மகளிர் கல்லூரியின் ஆன்மீக குரு ரெப.லிங்கேசன், உடுவில் மகளிர் கல்லூரியின் விளையாட்டு செயலாளர் ப.தர்மகுமார் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.





# யாழில் மனவளர்ச்சி குன்றிய யுவதி மீது கூட்டு வன்புணர்வு

## சிறிய தந்தை உள்ளிட்ட மூவர் கைது

மனவளர்ச்சி குன்றிய 18 வயதேயான யுவதி கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். விசாரணைகளின் அடிப்படையில், அவரின் சிறிய தந்தை உள்ளிட்ட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

யாழ்ப்பாணம், வடமராட்சி துன்னாலைப் பகுதியைச் சேர்ந்த மேற்படி யுவதிக்குக் கடந்த 3 மாதங்களாக மாதவிடாய் ஏற்படாததையடுத்து, கடந்த 14ஆம் திகதி அவருடைய தாய் அவரைப் பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றுள்ளார். அங்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் யுவதி கர்ப்பமாக இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது.

இது தொடர்பில் சட்ட மருத்துவ அதிகாரி கனகசபாபதி வாசுதேவா மேலதிக விசாரணைகளை மேற்கொண்டார். பொலிஸ் விசாரணைகளும் முன்னெடுக்கப்பட்ட நிலையில், பாதிக்கப்பட்ட சிறுமியின் தாயாருடைய சகோதரியின் கணவரும் (சிறிய தந்தை) இன்னும் இருவரும் இணைந்து, அந்த யுவதியைத் தொடர்ச்சியாகக் கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தி வந்தனர் என்று பொலிஸாரிடம் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து, சிறுமியின் சிறிய தந்தையான 46 வயதுடைய நபரையும், 28 வயதுடைய மற்றைய இருவரையும் பொலிஸார் நேற்றுக் கைது செய்தனர். அவர்களிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.





# கல்முனை சுகாதார பகுதியினருக்கு புவி வெப்பமடைதல் கலந்துரையாடல்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

புவி வெப்பமடைதல் தொடர்பாக சுகாதார பகுதி உத்தியோஸ்தர்கள் ஊடாக பொது மக்களைத் தெளிவுபடுத்தும் வகையில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த விழிப்புணர்வு நிகழ்வு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் சகிலா இஸ்ஸடீன் அவர்களின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலில் பணிமனையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

சுகாதார அமைச்சில் இருந்து வருகை தந்திருந்த டாக்டர் இனோகா சுரவீர பிரதான வளவாளராக கலந்து கொண்ட இந்த நிகழ்வில் பொது சுகாதார பரிசோதகர்கள் மற்றும் சுகாதாரப் பகுதி உத்தியோஸ்தர்கள் கலந்து கொண்டனர்.



# ஸ்ரீமன் நாராயணன் ஆலய சமுத்திர தீர்த்தோற்சவம் நாளை

( வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவு ஸ்ரீமன் நாராயணன் ஆலய அலங்கார உற்சவத்தின் சமுத்திர தீர்த்தோற்சவம் நாளை (19) திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

ஆலய பிரதம குரு சிவஸ்ரீ மகேஸ்வரக் குருக்கள் அதற்கான கிரியைகளை நடத்தி வருகின்றார்.

ஆலய பரிபாலன சபைத் தலைவர் ம.ஜெகநாதன் தலைமையில் அலங்கார உற்சவம் நடைபெற்று வருகிறது.

கடந்த காலங்களைவிட சிறப்பாக பாற்குடபவனி, வேட்டைத் திருவிழா, வரலட்சுமி விரதம், தினத் திருவிழா, சப்பைரத ஊர்வலம் என்பன நடைபெற்றன.

நாளை திங்கட்கிழமை சமுத்திர தீர்த்தோற்சவம், வைரவர் பூஜையுடன் இவ்வருட மகோற்சவம் நிறைவடையும்.





# கல்முனை பேச்சுப் போட்டியில் மஹ்மூத் மாணவி சாதனை

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) தரம் 11 மாணவி ஆர்.எப். அப்ராஹா பேச்சுப் போட்டியில் முதலிடம் பெற்றுக் கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளார். அவர் மாகாண மட்டப் போட்டிகளுக்குத் தெரிவாகியுள்ளார்.

கல்முனை மாவட்ட மட்ட போட்டிகள் தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண மட்ட போட்டிகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவியை உற்சாகமளிக்கும் நோக்குடன் அதிபர் ஏ.பி. நஸ்மியா சனூஸ் அலுவலகத்துக்கு அழைத்து பாராட்டி கெளரவித்தார்.

மாவட்ட மட்ட பேச்சு போட்டியில் முதலிடம் பெற்ற மாணவியைத் திறம்பட வழிப்படுத்தி பயிற்சியளித்து வெற்றிக்கு வழிவகுத்த தமிழ்பாட ஆசிரியர் எம். எம். அப்துல் ஹகீம், ஏ.எம். நியானா, எம்.எஸ். சித்தி ஆயிஷா ஆசிரியைகள், வெற்றி பெற்ற மாணவி ஆர்.எப். அப்ராஹாவின் பெற்றோர்களுக்கு பாடசாலை சமூகம் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளது.

இந்நிகழ்வில் பிரதி அதிபர்களான ஹாஜியானி. சமதா மசூது லெவ்வை, ஏ.எச். நதீரா, உதவி அதிபர்களான என்.டி. நதீகா, எம்.எஸ். மனுனா மற்றும் தமிழ் பாட ஆசிரியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# முஸ்லிம்களது அபிலாஷையைப் புதைக்கும் எந்தவோர் ஒப்பந்தத்தையும் எதிர்ப்போம்

## கிழக்கின் கேடயம் அமைப்பின் தலைவர் சபீஸ் தெரிவிப்பு

(நூருல் ஹுதா உமர்)

முஸ்லிம் மக்களின் அதிலும் குறிப்பாகக் கிழக்கு மக்களின் அபிலாசைகளைக் குழி தோண்டிப் புதைக்கும் எந்தவொரு ஒப்பந்தத்தையும் யார் மேற்கொண்டாலும் எதிர்ப்போம் என அக்கரைப்பற்று அனைத்து பள்ளிவாசல் சம்மேளனத்தின் முன்னாள் தலைவரும், கிழக்கின் கேடயம் அமைப்பின் தலைவருமான எஸ்.எம். சபீஸ் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தலில் முஸ்லிம் கட்சிகள் ஜனாதிபதி வேட்பாளர்களிடம் முன்வைக்கும் நிபந்தனைகளை மற்றும் கோரிக்கைகளை மக்களுக்கு வெளியிட வேண்டும் என்று கோரி அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையிலையே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். தொடர்ந்தும் அவரது அறிக்கையில்,

சகோதரர்கள் என்ற அடிப்படையில் எல்லா அரசியல் தலைவர்களின் உறவும் எங்களுக்கு இருந்தாலும் கிழக்கு மக்களின் வாக்குகளை வைத்துக் கொண்டு சூதாட யாரையும், எந்த தலைவரையும் ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

கடந்த காலங்களில் சிறுபான்மை கட்சிகள் ஒன்று சேர்ந்து வடக்குக் கிழக்கை இணைப்பதில் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்று ஒப்பமிட்டு இந்தியப் பிரதமருக்கு அனுப்பவிருந்த கடிதம் தொடர்பில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி அனைவரையும் ஒன்றிணைத்து



போராடித் தடை செய்தோம் அந்தப் போராட்டத்தில் கட்சி தாண்டி பலரும் எங்களுக்கு உதவி செய்தனர்.

தற்போது எங்களது வாக்குகளை அதிகம் வைத்திருக்கும் கட்சிகள் மேற்கொள்ளும் ஒப்பந்தங்களை மக்கள் முன் வெளிக்காட்ட வேண்டும். ரகசியமாக பேணுவதற்கு அது என்ன இருட்டறை ரகசியமா? கிழக்கு மக்கள் ஒன்றும் உங்கள் அடிமையும் கிடையாது. அவர்கள் முட்டாள்களும் அல்ல.- என்றுள்ளது.



# சுழிபுரம் மேற்கு கலைமகள் முன்பள்ளி விளையாட்டு விழா

சங்கானை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட சுழிபுரம் மேற்கு கலைமகள் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா கலைமகள் கலையரங்கு முன்றலில் முன்பள்ளி முகாமைத்துவ குழு தலைவர் வடிவேலு கோகுலநேசன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் விருந்தினர்கள் சுழிபுரம் மேற்கு ஹறிகர புத்திர ஐயனார் ஆலய முன்றலில் இருந்து சமய வழிபாடுகளை தொடர்ந்து பான்ட் வாத்தியத்துடன் அழைத்து வரப்பட்டனர்.தொடர்ந்து பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்த சங்கானை கோட்ட கல்வி பணிப்பாளர் நோபேட் உதயகுமார் விளையாட்டு நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்தார்.

தொடர்ந்து மாணவர்களின் விளையாட்டு நிகழ்வுகளும், மாணவர்களின் விநோத உடைப் போட்டியும் இடம்பெற்றன. விளையாட்டு நிகழ்வுகளில் கலந்து கொண்ட மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வில் சிறப்பு விருந்தினராகப் பொது சுகாதார பரிசோதகர் சரவணபவன் கஜேந்திரன், யாழ். பல்கலைக்கழக முன்னாள் முகாமைத்துவ பீட மாணவர் ஒன்றியச் செயலாளரும் முன்பள்ளியின் பழைய மாணவனுமான சித்திர சேனன் றாகவன், அலைமகள் கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத்தின் தலைவர் இராசரத்தினம் தயாபரன், ஊடகவியலாளர் இராசரத்தினம் தர் ஷன், சுழிபுரம்சமூக மட்ட அமைப்பு களின்பிரதிநிதிகள், முன்பள்ளி ஆசிரி யர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.





# புத்தளத்தைத் தாக்கிய மினி சூறாவளி!

புத்தளம் மாவட்டத்தில் மினி சூறாவளியால் மரங்கள் முறிந்து வீழ்ந்ததுடன், பொதுக் கட்டடங்களின் கூரைகளும் சேதமடைந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

வெள்ளிக்கிழமை இரவு (16) இரவு திடீரென இடியுடன் கடும் மழை பெய்ததுடன், மினி சூறாவளி காற்றும் வீசியுள்ளது. இதனால் அப்பகுதி முழுவதும் மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்தது.

மினி சூறாவளி காற்றுக் காரணமாக பாலாவி – கற்பிட்டி பிரதான வீதியில் இருந்த பல மரங்கள் முறிந்து வீழ்ந்தன. பாலாவி , கரம்பை பகுதியில் பிரதான வீதியோரத்தில் நின்ற பெரிய மரமொன்று முறிந்து பிரதான வீதியின் நடுவே வீழ்ந்ததில் அவ்வீதியுடனான போக்குவரத்துக்கு பாதிப்பு ஏற்பட்டிருந்தது.

மேலும் , மினி சூறாவளி காரணமாக கரம்பை தேத்தாப்பொல ஐயனார் ஆலயத்துக்கு அருகாமையில் இருந்த பாரிய மரமொன்று சரிந்து வீழ்ந்ததில் அந்த ஆலயத்தின் கூரை பகுதியளவில் சேதமடைந்தது. ஆலயத்தின் பிரதம குருக்கள் குடும்பத்துடன் தங்கிருந்த வீட்டின் கூரையும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

இதேவேளை, புத்தளம் நகர சபைக்குச் சொந்தமான மீன் சந்தைக் கட்டடம் மற்றும் கே.ஏ.பாயிஸ் ஞாபகார்த்த மண்டபம் என்பனவற்றின் கூரைகள் பகுதியளவில் தூக்கி வீசப்பட்டதாக புத்தளம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் கடமை நேர அதிகாரியொருவர் தெரிவித்தார்.



புத்தளம் உலுக்குளம் வித்தியாலயத்தில் உள்ள மூன்று மாடிக் கட்டடத்தின் கூரையும் இந்த மினி சூறாவளி காற்று காரணமாகச் சேதமடைந்துள்ளது என்று அந்த அதிகாரி மேலும் குறிப்பிட்டார்.

இவ்வாறு சேதமடைந்த கட்டடங்களை புத்தளம் நகர சபையின் செயலாளர் எல்.பி.ஜீ.பிரீத்திகா உள்ளிட்ட நகர சபையின் உத்தியோகத்தர்களும், புத்தளம் நகர சபையின் முன்னாள் நகர பிதாவும், ஐக்கிய மக்கள் சக்தியின் புத்தளம் மாவட்ட இணை அமைப்பாளருமான எம்.எஸ்.எம்.ரபீக் மற்றும் புத்தளம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் அதிகாரிகளும் தேரில் சென்று பார்வையிட்டனர்.





# அம்பாறை மாவட்ட வெகுஜன மக்கள் சம்மேளன செயலமர்வு

(றிஸ்வான் சாலிஹூ)

நாம் இலங்கையர் சமத்துவம் மற்றும் ஜனநாயகத்தை உருவாக்குதல் எனும் தொனிப் பொருளில் வெகுஜன மக்கள் சம்மேளனத்தின் அம்பாறை மாவட்ட இரண்டாவது செயலமர்வு அக்கரைப்பற்று ஜும்ஆ பெரிய பள்ளி வாசல் கூட்ட மண்டபத்தில் வெகுஜன மக்கள் அமைப்பின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் ஹாசிம் ஸாலிஹ் தலைமையில் நேற்று சனிக்கிழமை (17) நடைபெற்றது.

இந்தச் செயலமர்வில், வெகுஜன மக்கள் அமைப்பின் ஸ்தாபகர் சமன் ஹேமன்கொட விசேட வளவாளராகவும், ராகல்தமிழ்மொழி இணைப்பாளராகவும் கலந்து கொண்டார். இதில் முப்பதுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

நாட்டில் ஜனநாயக உரிமை மற்றும் மனித உரிமைகள் உறுதி செய்யப்படல் வேண்டும், ஜனாதிபதி தொடக்கம் சிறு பிள்ளைவரை அனைவருக்கும் உரிமை களும் சட்டங்களும் சமமானதாக இருத்தல் வேண்டும், நாட்டில் 52 வீதமான பெண்கள் மற்றும் சிறுபான்மை மக்கள் குழுக்களின் உரிமைகளை கோருபவர்களுக்கு ஆதரவாக செயற்படல், பொருளாதார நியாயம் மிக்க சமூகத்தை உறுதி செய்வதோடு பொருளாதார பிரச்சினைகளுக்கு குறுகிய கால மற்றும் நீண்ட கால தீர்வுகளை காண்பதற்கான கலந்துரையாடல்களை எமக்கிடையே ஆரம்பித்தல், புதிய உலகிற்கு ஏற்ற வகையில் இலவச மற்றும் சமமான நியாயமான தரமான கல்வி மற்றும் சுகாதார சேவையை உறுதி செய்தல் போன்ற இன்னும் பல விடயங்கள் பேசப்பட்டு இதனை தீர்ப்பதற்கான வழிமுறை மற்றும் ஆலோசனைகளான கருத்துக்களை செயலமர்வில் கலந்து கொண்டவர்களிடம் இருந்து பெற்றுக் கொண்டனர்.

சர்வமதக்குழு உறுப்பினர்கள், இளைஞர் அமைப்புக்களின் பிரதிநிதிகள், பெண்கள் அமைப்புகளின் உறுப்பினர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் கல்வியாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.





# ஒக்ரோபர் மாதத்துக்குள் விவசாயிகளுக்கு உரம்

எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்துக்குள் 55 ஆயிரம்மெற்றிக் தொன் அடிகட்டு பசளை உரம் இலங்கைக்கு வழங்கப்பட உள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

உலக உணவுத் திட்டத்துடன் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது உர இருப்பு கிடைத்துள்ளது என்று விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி, எதிர்வரும் இரண்டு பயிர்ச்செய்கைக் காலங்களுக்குத் தேவையான அடிகட்டு பசளை உரங்கள் இந்தப் பருவத்திலிருந்து விவசாயிகளுக்கு இலவசமாக வழங் கப்படும் என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.





# உலக புகைப்பட தினம் நாளை!



திருச்செல்வம் ஜனனீ
ஊடகத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்

ஆயிரம் வார்த்தைகளால் சொல்ல முடியாத தகவலை புகைப்படமானது ஒரு நொடிப் பொழுதிலே பேசிவிட்டு செல்கிறது. ஒரு சிறந்த புகைப்படவியல் என்பது பார்வையாளரின் மனங்களில் ஊடுருவி தாக்கத்தை ஏற்படுத்துவதாக இருக்க வேண்டும்.

ஊலகப் புகைப்பட தினம் ஓகஸ்ட் 19ஆம் திகதி கொண்டாடப்படுகின்றது. இது புகைப்படத்தின் முக்கியத்துவம் மற்றும் புகைப்படக் கலைஞர்களின் பங்களிப்பைக் கொண்டாடும் நாளாகும்.

19 ஆம் நூற்றாண்டின் பெருமை அல்லது சாதனையை ஆரம்பத்திலே லூயிஸ் டாகுவேரே என்பவரினால் “டாகுரி யோடைப்” என புகைப்படத்தின் செயற்பாட்டு முறையை வடிவமைத்தார். பின்னர் 1839 ஆம் ஆண்டு லூயிஸ் டாகுரே பாரிஸில் உள்ள போல்வர்கு கோயிலை அருகில் உள்ள தெருவை புகைப்படமாக எடுத்தார். இதுவே தனிநபரால் எடுக்கப்பட்ட முதல் புகைப்படமாக கருதப்படுகிறது.

எனினும் 1826 ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஜோசப் நைஸ்போர் நீப்ஸ் என்பவரே முதல் நிலையான நவீன புகைப்படத்தை எடுத்தார். ஓகஸ்ட் 19 ஆம் திகதி பிரான்ஸ் நாடு இவரது செயற்பாடுகள் குறித்து ப்ரீடுதி வோல்டு என உலகம் முழுவதும் அறிவித்து இதனை எடுத்துரைக்கும் முகமாகவே இந்த உலகப் புகைப்பட தினமாக கொண்டாடப்படுகிறது. புகைப்படம் எடுப்பதற்கு மிக முக்கியமான விடயமாக ஒளி கருதப்படுகின்றது.

இதில் இயற்கை மட்டும் செயற்கை ஒளிகளைப் பயன்படுத்தி எடுக்கப்படும் புகைப்படங்களில் உணர்ச்சிகள் வெளிக்காட்டப்படுகிறது. கமரா தனது ஒளிப்பதிவை மேற்கொள்கிறது. புகைப்படம் எடுப்பதற்குப் பொருத்தமான நேரத்தைக் குறிப்பாக அதனை கோல்டன் ஹவர் என்று கூறுவார்கள். அதாவது சூரியன் காலை உதித்த பிறகு சில மணி துளிகள் அதேபோல் சூரியன் மறையும் முன்னரான சில மணித்துளிகள் புகைப்படத்தைப் பதிவு செய்வதற்கு உகந்த நேரமாகக் கூறப்படுகின்றது.

### வெகுஜன ஊடகங்களில்

இன்றைய வரலாற்றை எதிர்காலத்துக்குக் கொண்டு செல்லும் ஒரு ஆற்றல் வாய்ந்த கருவியாக ஒளிப்படம் பாவனை சிறப்பிடம் பெறுகின்றது. இந்தப் புகைப்படவியலானது வெகுசன ஊடகங்களில் ஒன்றான பத்திரிகை அச்சு ஊடகத் துறைக்கு மொழியுடன் இணைந்து ஆணிவேராகப் புகைப்படவியல் பக்கபலமாக செயற்படுகின்றது. அச்சு ஊடகங்களில் புகைப்படங்களைப் பிரசுரிக்கும் முறை புகைப்படப் பத்திரிகைக் கலை என்ற பெயரில் இற்றைக்கு சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இங்கு பத்திரிக்கை அல்லது அச்சு ஊடகத்துறையின் ஒழுக்க நெறிக்கோவைக்கு ஏற்ற விதிமுறைகளின் செய்திக ளுக்கேற்ப புகைப்படம் இணைக்கப்படுகிறது.

இவ்வாறாகச் சஞ்சிகைகள், புத்தகங்கள், கட்டுரைத் தொகுப்புகள், துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள் ஆகிய அச்சு ஊடகங்களிலும் ஒளிப்படங்கள் பயன் படுத்தப்படுகின்றன. இவை அனைத்தும் புகைப்படக் கலையின் நியதிகளுடன் ஒத்திசைவாகியுள்ளன. ஊலகின் வர்த்தகதாரர்கள் தமது உற்பத்தி ஆதா யங்களைப் பெருக்கிக் கொள்வதற்கான விளம்பரகலையில் புகைப்படவியலும் மிகுந்த செல்வாக்கும் செலுத்துகிறது.

அடுத்து சினிமா என்பது புகைப்படத்தின் ஒரு தொடர்பாடல் நீட்சியே ஆகும். சினிமாவின் உடைய பல்வேறுபட்ட நோக்கங்களுக்காக புகைப்படம் தனது ஈடுபாட்டைச் செலுத்துகின்றது.

படப்பிடிப்பின் போது பாத்திரங்களின் தெளிவு மற்றும் அவர்களின் தோற்றங்கள் ஆடை அணிகளைத் தொடர்ச்சியாகப் பேணுவதற்குச் சினிமா சார்ந்த வெளியீடுகளைத் தயாரிப்பதற்காகச் சினிமா கலைஞர்களுக்கு கற்கைகளுக்காக போன்ற பல்வேறு வகையான நோக்கங்களுக்காக சினிமாவில் புகைப்படவியல் பயன்படுத்தப்படுகிறது. தொலைக்காட்சி ஊடகத்தின் புகைப்பட பாவனையானது பெரிதும் விளம்பரங்களுடன் இடைத் தொடர்பை ஏற்படுத்துவதற்காகப் பார்க்கப்படுகின்றது.

புகைப்படக் கலையானது நபருள்ளே இயற்கையை ரசிக்கும் தன்மையை ஒளியின் அருமை, இருளின் அழகு, தொலைநோக்க சிந்தனை, படைப்பாக்க சிந்தனைமெருகூட்டல், வண்ணங்களின் அழகைப் போற்றல் சூழலில் காணப்படக் கூடிய மூலக் கூறுகள் யாவற்றையும் அழுக்கு அசிங்கம் என பார்க்காமல் யாவற்றையும் புகைப்படவியல் சார்ந்த கதை சொல்லல் உத்தியுடன் நோக்குவதற்கு அடித்தளமாக உள்ளது.

யாதாயினொருவர் புகைப்படக் கலைஞராக உருவாவதற்கு அவரிடம் தனிப்பட்ட ஆர்வம் மட்டும் படைப்பாற்றல் போன்றன இன்றியமையாதவையாகும். மேலும் புகைப்பட கமரா பற்றிய கோணங்கள் மற்றும் அது சார்ந்த தெளிவான பயிற்சி நிலை காணப்பட வேண்டியது அவசியமாகும்.எமது நினைவலைகளை மீட்டி பார்ப்பதற்கு தூணாக அமையும் இன்றைய தினத்தை கொண்டாடுவோம்.

# தொழிலாளர் தேசிய சங்கத்துடன் இணைகிறார் கோபாலகிருஷ்ணன்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் அக்கரப்பத்தனை பிரதேச சபை முன்னாள் தலைவர் இராமன் கோபாலகிருஷணன் தொழிலாளர் தேசிய சங்கத்துடன் இணைகிறார்.இவர் இலங்கை தொழிலாளர் காஸ் கிரஸின் முக்கிய தலைவர்களில் ஒரு வராவார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு வழங்கும் வகையில் இந்ததீர்மானத்தைமேற்கொண்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.



# மூன்று கஜ முத்துக்களுடன் மூன்று சந்தேக நபர்கள் கைது

மூன்று கஜ முத்துக்களுடன் மூன்று சந்தேக நபர்கள் கைதுசெய்யப் பட்டுள்ளனர் என்று புத்தளம் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித் துள்ளனர்.

இலங்கைவிமானப்படையினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப் படையில் புத்தளம் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் மேற்கொள்ளப் பட்ட சுற்றிவளைப்பில் ஒரு கோடியே 30 லட்சம் ரூபா பெறுமதியான கஜ முத்துக்களுடன் மாவனல்லை மற்றும் புத்தளம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை புத்தளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தேர்தல் பிரச்சாரத்துக்கு வருவோரை தாக்கவுள்ளனர் அடவல கிராம மக்கள்

## அவர்களே விளம்பரம் செய்து வருகின்றனர்

மாத்தளை – நாவுல, அடவல கிராம மக்கள் இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கக் கோரி கிராமத்துக்கு வருவோரைத் தாக்கப் போகின்றனர் என்று விளம்பரங்களைக் காட்சிப்படுத்தியுள்ளனர்.

பல ஆண்டுகளாக தங்கள் கிராமத்துக்கு வந்த அரசியல்வாதிகள் அளித்த வாக்குறுதிகள் இதுவரை நிறைவேற்றப்படவில்லை என கிராம மக்கள் கூறுகின்றனர்.

தங்கள் கிராமத்துக்கு செல்லும் சாலை வசதி, விவசாய நிலங்களில் உள்ள பிரச்சினை, போக்குவரத்து சிரமம் போன்ற காரணங்களால், இந்தத் தேர்தலில், தங்கள் கிராம மக்கள் வாக்களிப்பதை புறக்கணிக்கின்றனர் என்று கிராம மக்கள் கூறுகின்றனர்.

வாக்குறுதிகளை நிறைவேற்றாத அரசியல்வாதிகள் தங்கள் கிராமத்திற்கு வரவேண்டாம் என்றும் அவ்வாறு வந்தால் பதில் சொல்ல தயார் என்றும் கிராம மக்கள் கூறுகின்றனர்.



# களுத்துறையில் வெள்ளத்தில் காணாமல் போனவர் சடலமாக!

களுத்துறையில் நேற்று முன்தினம் (16) பெய்த கனமழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட நபரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இந்த நபரின் சடலம் நேற்று (17) பிற்பகல் களுத்துறை - கோரகாதுவ பிரதேசத்தில் மீட்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

மீகஹதென்ன, கோரகாதுவ பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று தெரிவித்துள்ள பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# போலி நாணயத் தாள்களுடன் இரத்தினபுரியில் ஒருவர் கைது!

இரத்தினபுரி நகரில் 102 போலி 5000 ரூபா நாணயத்தாள்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பதுளை பிரதேசத்தை சேர்ந்த 33 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபருக்கு பதுளை மஹியங்கனை பொலிஸில் நிதிக் குற்றங்கள் தொடர்பான பல வழக்குகள் இருப்பதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

இரத்தினபுரி நகரில் உள்ள தங்கப் பொருள்கள் விற்பனை நிலையத்துக்கு வந்து ஐந்து லட்சம் ரூபாவுக்கு நகையைப் பெற்றுக் கொண்டு ஐந்தாயிரம் ரூபா கள்ள நோட்டுகளுடன் செல்லுபடியாகும் ஐந்தாயிரம் ரூபா தாள்களை கடைக்காரரிடம் கொடுத்த போது அவை போலி நாணயத்தாள்கள் என தெரியவந்துள்ளது.

சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணையில் பதுளை பிரதேசத்தை சேர்ந்த இவர் தனது வீட்டில் சிலகாலமாகபோலிநாணயத்தாள்களை அச்சடித்து வந்துள்ளார் என்று தெரியவந்துள்ளது.

# தமிழகத்தில் குரங்கம்மை பாதிப்பு யாருக்கும் இல்லை

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்



தமிழகத்தில் குரங்கம்மை பாதிப்பு யாருக்கும் இல்லை என அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

மேலும், குரங்கம்மை பாதிப்பைத் தொடர்ந்து வெளி நாடுகளில் இருந்து வருபவர்களுக்கு விமான நிலையங்களிலேயே பரிசோதனை மேற்கொள்ளப் படுகிறது என்றும் அவர் கூறினார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

“உலகம் முழுவதும் குரங்கம்மை பாதிப்பு இருப்பதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. சில தினங்களுக்கு முன்பு மத்திய அமைச்சர் ஜே.பி. நட்டா இது தொடர்பான கூட்டத்தை கூட்டி இந்தியாவில் யாரும் குரங்கம்மை நோயால் பாதிக்கப்படவில்லை என தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் குரங்கம்மை நோய்த் தொற்றால் இதுவரை யாரும் பாதிக்கப்படவில்லை. குரங்கம்மை பாதிப்பு தொடர்பான விழிப்புணர்வு பலகையை அனைத்து விமான நிலையங்களிலும் வைக்க இருக்கிறோம். நானும் அதை ஓரிரு நாட்களில் ஆய்வு செய்ய இருக்கிறேன். வெளிநாடுகளில் இருந்து வருபவர்களுக்கு விமான நிலையங்களிலேயே பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது. ஏதேனும் அறிகுறிகள் இருந்தால் அவர்களுக்கு அங்கேயே சிகிச்சை அளிக்கப்படும்.” – என்றார்.

# பிரதமர் மோடியுடன் சந்திரபாபு நாயுடு சந்திப்பு



டில்லி சென்றுள்ள ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு நேற்று பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது, ஆந்திர மாநிலத்தின் தற்போதைய அரசியல், பொருளாதார நிலையை விவரித்துள்ளார்.

ஆந்திர மாநில முதல்வர் சந்திரபாபு நாயுடு தற்போது டில்லி சென்றுள்ளார். அவர் பிரதமர் நரேந்திர மோடியை அவரது இல்லத்தில் நேற்று மாலை சந்தித்தார்.

அப்போது, ஆந்திர மாநில வளர்ச்சி திட்டங்கள் குறித்து பிரதமரிடம் சந்திரபாபு நாயுடு பேசியுள்ளார் என கூறப்படுகிறது.

போலவரம் அணைக்கட்டு பணியின் மொத்த செலவையும் மத்திய அரசு ஏற்பதாக கூறியதை தொடர்ந்து, அதற்கான நிதி ஒதுக்கீடு குறித்தும், பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட, தலைநகர் அமராவதி வளர்ச்சி நிதியான 15 ஆயிரம் கோடி ரூபா குறித்தும் அவர் பேசியுள்ளார் என தகவல் வெளியாகி உள்ளது.

# தெற்கு நாடுகளில் தீவிரவாதம் பிரிவினைவாத அச்சுறுத்தல்கள்

## பிரதமர் மோடி கவலை



பயங்கரவாதம், தீவிரவாதம், பிரிவினைவாதம் ஆகியவை நமது சமூகங்களுக்கு கடும் அச்சுறுத்தல்களாக உள்ளன என்று உலகளாவிய தெற்கு உச்சி மாநாட்டில் உரையாற்றிய பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

உலகளாவிய தெற்கு உச்சி மாநாட்டின் மூன்றாவது பதிப்பு, இந்தியாவின் ‘உலகம் ஒரு குடும்பம்’ என்ற தத்துவத்தின் அடிப்படையில் இந்தியாவால் இணையவழியில் நடத்தப்பட்டது.

பிரதமர் மோடி தனது தொடக்க உரையின்போது,

“உலகளாவிய தெற்கு உச்சி மாநாட்டின் குரல் வளர்ச்சி தொடர்பான பிரச்சினைகளை விவாதிக்க ஒரு தளமாக மாறியுள்ளது. சுற்றிலும் நிச்சயமற்ற சூழல் நிலவும் நேரத்தில் இன்று நாம் சந்திக்கிறோம். கொவிட் பாதிப்பில் இருந்து உலகம் இன்னும் முழுமையாக வெளிவரவில்லை. மறுபுறம், போர் சூழ்நிலை நமது வளர்ச்சிப் பயணத்திற்கு சவால்களை உருவாக்கியுள்ளது.

பருவநிலை மாற்றத்தின் சவால்களை மட்டும் நாம் தற்போது எதிர்கொள்ளவில்லை. சுகாதார பாதுகாப்பு, உணவு பாதுகாப்பு மற்றும் எரிசக்தி பாதுகாப்பு ஆகியவற்றின் சவால்களையும் நாம் எதிர்கொள்கிறோம். பொருளாதார சவால்கள், சமூகம் எதிர்கொள்ளும் தொழில்நுட்பம் சார்ந்த சவால்களும் தற்போது அதிகரித்து வருகின்றன. பயங்கரவாதம், தீவிரவாதம் மற்றும் பிரிவினைவாதம் ஆகியவை உலகளாவிய தெற்கில் உள்ள சமூகங்களுக்கு கடுமையான அச்சுறுத்தலாக உள்ளன. ஒற்றுமையில் பலம் உள்ளது. இது உலகளாவிய தெற்கு நாடுகள் புதிய திசையை நோக்கி செல்ல உதவும்.

உலகளாவிய நிர்வாகத்தை கையாள்வதற்காக முந்தைய நூற்றாண்டில் உருவாக்கப்பட்ட நிறுவனங்களால், தற்போதைய நூற்றாண்டின் சவால்களை எதிர்கொள்ள முடியவில்லை. இந்தியாவின் நிபுணத்துவம் மற்றும் அனுபவங்களை சர்வதேச தெற்குடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.” – என்றார்.






# எம்.பிக்கள் இடையில் மோதல் துருக்கி நாடாளுமன்றில் பரபரப்பு

துருக்கி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்ட சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

துருக்கி நாடாளுமன்ற கூட்டத்தொடர் இடம்பெற்ற நிலையில், சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் குறித்து விவாதம் இடம்பெற்றுள்ளது.

மேற்படி விவாதத்தின்போது கடும் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளதுடன், எதிர்க்கட்சிக்கும் ஆளுங்கட்சிக்கு இடையில் மோதல்நிலை ஏற்பட்டதாக வெளிநாட்டு ஊடகங்கள்தெரிவித்துள்ளன.இந்த சம்பவம் தொடர்பான காணொளிகள் தற் போது வைரலாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# ரஷ்யாவில் 7 ரிக்டர் அளவில் சக்தி வாய்ந்த நில அதிர்வு

ரஷ்யாவில் சக்திவாய்ந்த நில நடுக்கம் ஏற்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த நிலநடுக்கமானது ரஷ்யாவின் கிழக்கே உள்ள கடல் பகுதியில் இன்று அதிகாலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 7 ஆக பதிவானதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலநடுக்கத்தையடுத்து அமெரிக்க தேசிய சுனாமி எச்சரிக்கை மையம் சுனாமி எச்சரிக்கை விடுத்த போதிலும், பின்னர் அது சுனாமி நிலை அல்ல என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கம் பசிபிக் பெருங்கடலில் நிலநடுக்கம் அடிக்கடி ஏற்படும் பகுதியில் ஏற்பட்டுள்ளதுடன், முதல் நிலநடுக்கத்திற்குப் பிறகு பல நில நடுக்கங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த கடற்பகுதியில் பல எரிமலைகள் உள்ளன எனவும் வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.





# தெற்கு லெபனானில் வான் தாக்குதல் 2 குழந்தைகள் உட்பட 10 பேர் பலி

தெற்கு லெபனானில் இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் 2 குழந்தைகள் உட்பட 10 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

ஹிஸ்புல்லா போராளிகள் பயன்படுத்திய ஆயுதக் கிடங்கைக் குறிவைத்து இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலில் ஐவர் படுகாயமடைந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

கனடா முரசு

பக்கங்கள் - 4

ஞாயிற்றுக்கிழமை | 18/08/2024


## இரு புதிய செனட்டர்களை நியமித்தார் பிரதமர் ட்ரூடோ

ஒன்ராரியோ, ஓகஸ்ட் 18
பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ நேற்று இரண்டு புதிய செனட்டர்களை நியமித்தார்.

C2 ▶



# கனடா - அமெரிக்க எல்லையில் ரயில்வே பாலம் ஒன்று நிலைகுலைந்து சரிந்ததால் போக்குவரத்துகள் பாதிப்பு



கனடா - அமெரிக்க எல்லையில் அமைக்கப்பட்டிருந்த ரயில்வே பாலம் ஒன்று நிலைகுலைந்து சரிந்ததால், அப்பகுதியில் நீர்வழி போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.


இந்த சம்பவத்தில் ரயில்கள் எதற்கும் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை. மக்களும் யாரும் காயமடையவில்லை என அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள்.

எதனால் அந்தஉ பாலம் நிலைகுலைந்து சரிந்தது என்பதை அறிய விசாரணை ஒன்று துவக்கப்பட்டுள்ளது.

அந்தப் பாலம், 1908ஆம் ஆண்டு கட்டப்பட்டதாகும். நூற்றாண்டு கடந்த அந்தப் பாலம், Rainy River Rail Lift Bridge அல்லது the 5 Mile Bridge என அழைக்கப்படுகிறது.

படகுகள் வரும்போது, பாலம் திறந்து படகுகளுக்கு வழிவிடும் வகையில் அது அமைக்கப்பட்டுள்ளது.

தற்போது அந்தப் பாலம் நிலைகுலைந்துள்ள நிலையில், அது சரிசெய்யப்பட எவ்வளவு காலம் ஆகும் எனத் தெரியவில்லை.




# போலியான இலங்கைக்ல் கடவுச்சீட்டின் மூலம் வங்கிக் கணக்கைத் திறக்க முயன்றவர் கைது

**ஒன்ராரியோ, ஒகஸ்ட் 18**

போலியான இலங்கை கடவுச் சீட்டின் மூலம் வங்கிக் கணக்கைத் திறக்க முற்பட்ட ஆண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிக்கரிங் நகரில் ஒகஸ்ட் 13ஆம் திகதி இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதானவர் விட்சர்ச்-ஸ்டோவில் நகரைச் சேர்ந்த 31 வயதான கபிலரசு கருணாநிதி என டூரம் பிராந்திய பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

இவர் செவ்வாய்கிழமை பிக்கரிங் நகரில் உள்ள ஸ்கோட்சியா வங்கி யில் வங்கிக் கணக்கைத் திறக்க முற்பட்டுள்ளார்.

இவர் உபயோகிக்க முனைந்த இலங்கைக் கடவுச்சீட்டு மோசடியானது என கண்டறிந்த வங்கி ஊழியர்கள் பொலிஸாருக்குத் தகவல் வழங்கி யுள்ளனர்.

கைது செய்யப்பட்ட அவருக்கு எதிராக மொத்தம் 11 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

# வாகனப் பரிமாற்ற மோசடிகளில் ஈடுபட்ட ரொறன்டோ நபர் மீது 101 குற்றச்சாட்டுகள்

ஒன்ராரியோ, ஒகஸ்ட் 18

வாகன மோசடி விசாரணை தொடர் பாக ரொறன்டோ நபர் ஒருவர் 101 குற் றச்சாட்டுகளை எதிர்கொண்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சர்வீஸ்ஒன்டாரியோ இடங்களில் 'மோசடி' வாகனப் பரிமாற்றங்கள் என்று புலனாய்வாளர்கள் விவரித்த ஒரு நபர் பற்றி ஜூலை மாதம் தகவல் கிடைத்ததாக ரொறன்டோ பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

சர்வீஸ் ஒன்டாரியோ புலனாய் வாளர்களுக்கு தாங்கள் உதவினர் எனக் கூறிய பொலிஸார், நவம்பர் 2023 வரையிலான வாகனம் தொடர்பான பல மோசடிகளுக்கு அந்த நபர் பொறுப்பு என்று குறிப்பிட்டுள்ளனர்.

ஒகஸ்ட் 18 ஆம் திகதி ஒரு சந் தேகநபர் மீது பிடிவிறாந்து பிறப்பிக் கப்பட்டு ரொறன்டோவைச் சேர்ந்த 43 வயதான விங்கிள் லெஜார்ட் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் 101 குற்றச்சாட்டுகளை எதிர்கொள்கிறார், இதில் 15 போலி ஆவணங்கள், ஒன்பது குற்றச்சாட்டுகள் 5,000 டொலர்களுக்கு மேல் மோசடி செய்தமை தொடர்பானவை. மற்றும் வாகன அடையாள எண்ணை மாற்றி யமைத்தல் அல்லது அகற்றியமை தொடர்பான 9 குற்றச்சாட்டுக்களும் இதில் அடங்கும்.

மேலும் பாதிக்கப்பட்டவர்கள் இருக்க லாம் என்று பொலிஸார் நம்புகிறார் கள். மற்றும் லெஜார்டே கைது செய் யப்பட்டமையை அறிவித்தபோது அவரது படத்தைப் பொலிஸார் வெளி யிட்டுள்ளனர்.

---

**இரு புதிய...**

**(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

ஒளிபரப்பாளர் சார்லஸ் அட்லர் மற்றும் ஹெல்த்-கேர் எக்சிக்யூட்டிவ் டிரேசி முக்லி ஆகியோர் கனடாவின் செனட் சபை உறுப்பினர்களின் வரிசையில் இணைந்தனர்.

'கனடாவின் செனட் அதன் புதிய சுதந்திரமான செனட்டர்களால் வலுவாக இருக்கும். அட்லர் மற்றும் முக்லி ஆகியோர் தங்கள் புதிய பாத்திரங் களில் அனைத்து கனடியர்களுக்கும் பணிபுரிய அவர்களின் பரந்த அனுப வத்தையும் அறிவையும் வழங்குவார்கள்' என்று ட்ரூடோ ஒரு செய்தி வெளியீட்டில் தெரிவித்தார்.

ஹங்கேரியைச் சேர்ந்த அகதி யான அட்லர், பல தசாப்தங்களாக ஒளி பரப்பாளராகவும் எழுத்தாளராகவும்





இருந்து வருகிறார்.

அவர் ஒரு பத்திரிகையாளராக தனது வாழ்க்கை முழுவதும் ஒரு முக்கிய அர சியல் விமர்சகர் இருந்தவர்.

அவர் செனட் சபையில் மனிடோ பாவை பிரதிநிதித்துவப் படுத்து வார்.

சஸ்கடூனில் ஒரு சுகாதாரப் பாது காப்பு நிர்வாகி மற்றும் சுகாதார மற்றும் சமூக சேவைத் துறையில் பல நிறு வனங்களில் முக்லி பணியாற்றியுள் ளார்.



# எட்டோபிகொக்கில் வீடு தீக்கிரை குடியிருப்பாளர் ஒருவர் உயிரிழப்பு

**ஒன்ராரியோ, ஒகஸ்ட் 18**

நேற்றிரவு எட்டோபிகொக்கில் வீடு ஒன்று தீப்பிடித்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக டொராண்டோ பொலிஸார் தெரிவித்துள்ளனர் டன்லொப்.

லேக் ஷோர் பவுல்வர்டு மற்றும் மைல்ஸ் ரோடு பகுதியில் வீடொன்றில் ஏற்பட்ட தீ விபத்திற்கு மாலை 6:41 மணியளவில் தீயணைப்பு வீரர்கள் வரவழைக்கப்பட்டனர்.

பெரிய தீப்பிழம்புகளுடன் ஜன்னல்கள் வெடித்துச் சிதறின என தமக்குத் தகவல்கள் கிடைத்தன என டொராண்டோ பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த வீட்டில் இருந்து குடியிருப்பாளர் ஒருவர் மீட்கப்பட்ட போதிலும், அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என பொலிஸார் குறிப்பிட்டனர்.

தீ ஏற்பட்டதற்கான காரணம், தோற்றம் மற்றும் சூழ்நிலைகள் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.



# தன் பராமரிப்பில் இருந்த இரு குழந்தைகளை பாலியல் வன்கொடுமைக்குள்ளாக்கினாராம்!

## ரொறன்டோவைச் சேர்ந்தவர் மீது பல்வேறு குற்றச்சாட்டுகள்

**ஒன்ராரியோ, ஒகஸ்ட் 18**

தனது பராமரிப்பில் இருந்த இரண்டு குழந்தைகளை பாலியல் வன்கொடுமை செய்தார் எனக் குற்றம் சாட்டப்பட்ட ஒரு நபர், பத்துக்கும் மேற்பட்ட புதிய பாலியல் குற்றங்களை எதிர்கொள்கிறார்.

அந்த நபர் 2005 மற்றும் 2013 க்கு இடையில் பராமரிப்பாளராகச் செயற்பட்ட போது பல இளைஞர்களை பாலியல் வன்கொடுமை செய்தார் என டொரன்டோ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



47 வயதான ரொறன்டோவைச் சேர்ந்த கெவின் மார்ஷ்என்பவரை பொலிஸார் கைது செய்தனர்.

அவர் மீது 14 குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ளன, இதில் நான்கு பாலியல் தொல்லைகள், மூன்று பாலியல் குறுக்கீடுகள், இரண்டு பாலியல் சுரண்டல் குற்றச்சாட்டுகள் மற்றும் ஒரு குழந்தை ஆபாசப்படம் செய்தமை உட்பட 14 குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ளன.

இவரால் மேலும் பலர் பாதிக்கப்பட்டிருக்கலாம் என கருதுவதால், சந்தேகநபரின் படத்தைப் பொலிஸார் வெளியிட்டுள்ளனர்.

2017 ஆம் ஆண்டில், இரண்டு குழந்தைகளின் பாலியல் வன்கொடுமை தொடர்பாக மாரஷ் மீது 21 குற்றங்கள் சுமத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# டொரன்டோ பெருநகரப் பிரதேசத்தில் நெடுஞ்சாலைகளை வெள்ளம் சூழ்ந்தது

**ஒன்ராரியோ, ஒகஸ்ட் 18**

டொரன்டோ பெருநகரப் பகுதியில் நேற்று பெய்த மழை காரணமாக வாகன நிறுத்துமிடங்கள், தெருக்கள் மற்றும் நெடுஞ்சாலைகளில் வெள்ளம் சூழ்ந்தது.

கனமழை காரணமாக டொராண்டோ பியர்சன் சர்வதேச விமான நிலையத்தின் இரண்டு முனையங்களிலும் கசிவு ஏற்பட்டது.

எனினும், நீர் கட்டுக்குள் இருப்பதாகவும், சுத்தம் செய்யும் பணி நடந்து வருவதாகவும் விமான நிலையம் தெரிவித்துள்ளது.



மழை காரணமாக பல விமானங்கள் திசைதிருப்பப்பட்டு தரை தாமதங்கள் ஏற்பட்டன எனப் பியர்சன் விமான நிலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

டொரன்டோ மற்றும் தெற்கு ஒன்ராரியோவின் பெரும்பகுதி நாள் முழுவதற்கும் வானிலை எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதில் சூறாவளி, கடுமையான இடியுடன் கூடிய மழை மற்றும் மழை எச்சரிக்கைகள் அடங்கும்.

# ஒன்ராரியோவில் கல்வி அமைச்சராக டொட் ஸ்மித் இடத்துக்கு டன்லொப்

**ஒன்ராரியோ, ஒகஸ்ட் 18**

ஒன்ராரியோவின்புதியகல்விஅமைச்சராக ஜில் டன்லொப் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஒன்ராரியோ மாகாண கல்வி அமைச்சர் டொட் ஸ்மித் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பதவி விலகிய நிலையில் புதிய கல்வி அமைச்சர் பதவி நியமிக்கப்பட்டார்.

டொட் ஸ்மித் பதவி விலகிய சில மணிநேரங்களுக்கு பின்னர், முதல்வர் டக் போர்ட் தனது அமைச்சரவையில் மாற்றங்களை அறிவித்தார்.

நோலா குயின் புதிய கல்லூரிகள், பல்கலைக்கழகங்களின் அமைச்சராக பதவியேற்றார்.

இந்த அமைச்சு பதவியை ஜில் டன்லொப் இதுவரை காலமும் வகித்து வந்தமை குறிப்பிடத்தக்கது.





சிம்கோ நோர்த் தொகுதியின் மாகாண சபை உறுப்பினராக 2018 முதல் பதவி வகிக்கும் ஜில் டன்லொப், 2021 ஆம் ஆண்டு முதல் கல்லூரிகள், பல்கலைக்கழகங்களின் அமைச்சராக பதவி வந்தார்.

புதிய இணை அமைச்சராக கெவின் ஹொலன்ட், கிரஹம் மெக்கிரகர் ஆகியோரும் நியமிக்கப்பட்டனர்.